NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p4
**Date:** 27 May 2022

# உக்கிரமான நோயாளிகளைச் சமாளிக்கும் பயிற்சி

சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தில் மருத்துவம், தாதிமை ஆகிய பாடத்திட்டங்களைப் பயிலும் மாணவர்களுக்கு, உக்கிரமான நோயாளிகளைக் கையாள்வதற்கான மெய்நிகர் பயிற்சி விரைவில் வழங்கப்படவிருக்கிறது.

சிங்கப்பூரில் கொவிட்-19 கிருமிப்பரவலால் மன நலப் பிரச்சினைகளை எதிர்கொள்வோரின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்தது. சுகாதாரப் பராமரிப்பு ஊழியர்களுக்கு எதிரான வன்செயல்களும் அதிகரித்தன.

இத்தகைய நோயாளிகளைச் சமாளிக்கும் மெய்நிகர் பயிற்சிக்கு பல்கலையின் யோங் லூ லின் மருத்துவப் பள்ளி ஏற்பாடு செய்துள்ளது. ‘விர்ச்சுவல் ரியாலிட்டி’ முறையில் நோயாளிகள் ஆத்திரப்படும் சம்பவங்கள் பாவனையாகச் சித்திரிக்கப்பட்டு மாணவர்கள் அதில் பயிற்சி பெறுவர் என்று தெரிவிக்கப்பட்டது.

Source: Tamil Murasu © SPH Media Limited. Permission required for reproduction.